ஞாலகுருவின் படைப்புக்கள்

# இந்துக்களுக்கு தத்துவம்தான் வழிகாட்டி, வழித்துணே!



நாட்டுக்கு யார் தலைவராக இருப்பது, யாருடைய கட்சி நாடாளுவது என்ற போட்டாப் போட்டிதான் நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. இதில் எந்தக் கட்சிக்குமே கொள்கையோ, குறிக்கோளோ கிடையாது. எந்தத் தலைவருக்குமே தத்துவம் கிடையாது; இந்த நாட்டின் பழம்பெரும் தத்துவம் தெரியாது.


அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 ஆவணி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

# உள்ளுறை

1. **"அருளுலகத்தாரின் சட்டம், விதி"** - குருதேவர் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் 18-11-1988இல் மதுரைச் சித்தரடியான் மூலமாக அனைவருக்கும் குருதேவரை ஞானக்காட்சியில் காண முடியாது என்பதை விளக்கிடும் அஞ்சல்.
2. **"குரு நிலை விளக்கத் திருவோலை"** - 29-07-1988இல் குருதேவர் அவர்கள் கோவை மாவட்டச் சிறுமுகைச் சித்தரடியான் மூலமாக அனைவருக்கும் குருவின் நிலையை விளக்கிடும் அஞ்சல்.
3. **"அருள் வழங்கும் முறைகளும், அருள் பெறும் முறைகளும்"** - குருதேவர் அவர்கள் 10-12-1988இல் தூத்துக்குடியைச் சேர்ந்த குடும்பத்தாருக்கு சித்தர்களிடமிருந்து அருள் பெற என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கி எழுதிய அஞ்சல்.
4. **"சமயக்குரவர் நால்வர் சன்னிதானத் திருத்தோற்ற எழுந்தருளி"** - மதுரையைச் சேர்ந்த சித்தரடியானுக்கு குருதேவர் அவர்கள் 16-12-1988இல் புதிதாக அருட்பட்டம் வழங்கி எழுதிய அஞ்சல்.
5. **"நாம் யாருக்கும் விரோதியில்லை; நமக்கு யாரும் விரோதியில்லை"** - 24-01-1989இல் குருதேவர் அவர்கள் மதுரைச் சித்தரடியானுக்கு இயக்கத்தின் தொண்டு மனப்பான்மையை விவரித்து எழுதிய அஞ்சல்.
6. **"அரசியல்வாதிகள் போட்டியிடுகின்ற தேர்தல் களத்தில் ஆன்மீகவாதிகள் ஏன் போட்டியிட வேண்டும்?"** - இந்தத் தலைப்பில் 21-01-1989இல் நிகழ்ந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் இயக்கத்தின் சார்பாக நின்றவருக்காக குருதேவர் அவர்கள் வழங்கிய அறிவிக்கை.
7. **"குருபாரம்பரிய வாசகங்கள்"** - குருதேவர் அவர்கள் வழங்கிய சில குருபாரம்பரிய வாசகங்கள்.

# அருளுலகத்தாரின் சட்டம், விதி

தலைமைப்பீடம்,
18-11-1988.

பேரன்பும் பெருமதிப்பிற்குமுரிய செயல்வீரர், அருள்மிகு ஆலவாய் மாமூதூர் தத்தனேரி சுடலைப் பத்திரகாளி சன்னிதானம், தென்மண்டல அ.வி.தி. தலைவர், தென்மண்டல நிறுவன நிருவாகக் குழுப் பொறுப்பாளர், குருதேவரின் உரிமைத் தம்பியும், மகனுமான சித்தரடியான் ச.துரைராசன் ( 115, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை - 625010 ) அவர்களின் அருட்சமூகத்திற்கு தலைமைப்பீடத்தில் இருந்து விடுக்கப்படும் மடல்.

1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்களின் திருவருளே!

2) இதற்குமுன் தங்களுக்கு தலைமைப்பீடத்தில் இருந்து அனுப்பிய கடிதங்கள் கிடைத்திருக்கும் என்று நம்புகின்றோம்.

3) **குருதேவரை யாருமே ஞானக்காட்சியில் பார்க்க முடியாது. குருதேவரை யாருமே ஞானத்தால் உணர முடியாது.**

**குருதேவர் யாருடைய கனவிலும் வந்து எதையும் சொல்வதில்லை, சொல்லவும் மாட்டார்.**

4) விண்ணையும் மண்ணையும் இணைக்கும் ஆற்றல் படைத்த பீடாதிபதியே நமது குருதேவர் என்பதால்; ஒரே நேரத்தில் 1,50,000 (நூற்றைம்பதாயிரம்) இடங்களில் உருவத்தோடு, உடலோடு, உயிரோடு, உணர்வோடு தோன்றிச் செயல்படக் கூடிய பேராற்றல் உடையவர்.

5) ஆனால் அவர் எந்த இடத்தில் தோன்றினாலும்; உரியவரிடம், அதை யாரிடமும் வெளிப்படுத்தக் கூடாது என்ற உறுதிமொழி கூறித்தான் தோன்றுவார். இதை அனைவரும் உணர்ந்து கொள்க!

6) இவற்றால்தான் குருதேவர் பலரை அருட்பணி ஆற்றுவதற்காக மட்டுமே தம்முடைய மகனாக, மகளாக, பதிலியாக, வாரிசாக, உரிமைச் சுற்றமாக அறிவிக்கிறார். அவர்களும் செயல்படும்போது, குருதேவரின் ஆற்றல்தான் வெளிப்படுமே தவிர, குருதேவரை தெரிந்து கொள்ளவோ, உணரவோ முடியாது.

7) **குருதேவர் யார் மீதும் அருள் வந்த மாதிரியோ, மருள் வந்த மாதிரியோ பேசிச் செயல்பட மாட்டார்.**

8) இவைதான் தாத்தாக்கள் ஆத்தாக்கள் கட்டளை! அம்மையப்பன்களின் அருளாட்சி ஆணை! அருளுலகத்தாரின் சட்டம், விதி. எனவே இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

9) இந்த குருதேவரின் விளக்கம் பற்றிய அஞ்சலை நூற்றுக்கணக்கான நகல் எடுத்து பழையவர், புதியவர் என அனைவருக்கும், அந்தந்த வட்டாரத்தில் வழங்கிடுங்கள்.

10) இனிமேல் யாரும் குருதேவர் பெயரைச் சொல்லிக் கொண்டு மேற்படித் தவறுகளை செய்யக் கூடாது.

11) எதுவாக இருந்தாலும் தலைமைப்பீடம் (Letter pad) அஞ்சல் தாளில் குருதேவரின் கையெழுத்துப் போட்ட செய்திகளைத்தான் நம்ப வேண்டும்.

12) அருட்போர் துவங்குவதற்கு இன்னும் நான்கு ஆண்டுகள் இருக்கின்றன. எனவே, நமக்குள் வதந்திகள், தனிமனிதர்களின் கற்பனைகள், கனவுச் செய்திகள், உணர்வுச் செய்திகள், ஞானக்காட்சிச் செய்திகள் என்று எதுவுமே தம் போக்கில் இயக்கத்தை திசை திருப்பி விட்டு விடக் கூடாது. எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

13) எந்தச் செய்திகள், ஆணைகளாக இருந்தாலும் அதை குருதேவருக்கும், தலைமைப்பீடத்திற்கும் எழுதி முறையான, நிறைவான விளக்கங்கள் பெற்றுத்தான் தெளிவு பெற வேண்டும். ஏனெனில், இன்றைய நிலையில் நாட்டு மக்களில் ஏறத்தாழ நூற்றுக்கு ஒருவர் கூட (அல்லது) ஆயிரத்தில் ஒருவர் கூட இன்னும் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு முதலியவற்றின் உரிமை விடுதலை, பெருமை விடுதலை பற்றி சிந்திக்கத் தயாராக இல்லை.

14) மேலும் ஏறத்தாழ தமிழகத்தின் தலைவர்கள் அனைவருமே தங்களுடைய போக்கில் சொந்த வளர்ச்சி, புகழ்ச்சி, வளவளர்ச்சி, பொருளீட்டம், ... முதலிய கண்ணோட்டங்களில்தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

15) அதாவது நாட்டுக்கு யார் தலைவராக இருப்பது, யாருடைய கட்சி நாடாளுவது என்ற போட்டாப் போட்டிதான் நடந்து கொண்டிருக்கிறது நாட்டில். இதில் எந்தக் கட்சிக்குமே கொள்கையோ, குறிக்கோளோ கிடையாது. எந்தத் தலைவருக்குமே தத்துவம் கிடையாது. இந்த நாட்டின் பழம்பெரும் தத்துவம் தெரியாது. அதில் அவர்களுக்கு விருப்பமும் இல்லை, நம்பிக்கையும் இல்லை.

16) இதை நேரடியாகச் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்மொழியையும், இலக்கியங்களையும், தமிழர்களின் வரலாறுகளையும், சமயத் தத்துவங்களையும், சமுதாய இயல்களையும் பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லாதவர்களே பெரும்பாலும் தலைவர்களாகவும், மக்கள் செல்வாக்குப் பெற்ற கலைஞர்களாகவும் வாழுகிறார்கள்.

17) அதனால் தத்துவ நாயகமாகவும், அருளாட்சி நாயகமாகவும் விளங்கும் குருதேவரால் தமிழக மக்களுக்கு வழிகாட்ட வாய்ப்போ, தலைமை தாங்கும் வாய்ப்போ விரைவில் உருவாகும் என்பது இயலாததொன்றாக இருக்கிறது.

18) எனவேதான், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் தம்முடைய வாக்கு, வாக்கியம், வாசகம் எனும் பதினெட்டு வகையான இலக்கியங்களிலும், குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம் எனும் முப்பெரும் பாரம்பரியங்களிலும்; திரும்பத் திரும்ப '**தமிழர்களுக்கு, திராவிடர்களுக்கு, இந்துக்களுக்கு, உலக மக்களுக்கு (அவர்கள் எந்த மொழி, மதம், இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரியே!) தத்துவம்தான் வழிகாட்டி, வழித்துணையாகி தலைமை தாங்க வேண்டும்**' என்று எழுதியுள்ளார்.

19) **அப்படியல்லாமல் அந்தந்தக் காலங்களில் தோன்றக் கூடிய எந்தவொரு தனிமனிதரையும் முழுமையாக வழியாகவோ, வழிகாட்டியாகவோ, வழித்துணையாகவோ, தலைவராகவோ ஏற்றுச் செயல்படக் கூடாது! செயல்படக் கூடாது!! செயல்படக் கூடாது!!! செயல்படவே கூடாது!!!!**

20) அதனால்தான் இனங்களுக்கும், மொழிகளுக்கும், நாடுகளுக்கும், தத்துவங்களுக்கும், சித்தாந்தங்களுக்கும், சமுதாயங்களுக்கும், அரசியல்களுக்கும் காலங்கள் தோறும் மாறிமாறி வீழ்ச்சிகளும், தாழ்ச்சிகளும், சிதைவுகளும், சீரழிவுகளும், அடிமை நிலைகளும் ஏற்பட்டிட நேரிடுகின்றது.

21) அதாவது, கனிமலர்ச் சோலையில் எந்த மரமோ, செடியோ, கொடியோ பட்டுப் போகக் கூடாது; பாதித்து விடக் கூடாது என்பதுதான் உயர்ந்த தத்துவமாகவும், சித்தாந்தமாகவும் இருக்க முடியும்! - அதைப்போல் இம் மண்ணுலகில் உள்ள எந்தவொரு இனமோ, மொழியோ, நாடோ, மதமோ, பண்பாடோ, நாகரிகமோ, தத்துவமோ, சித்தாந்தமோ அடிமைப்படுத்தப் படக்கூடாது, இழிக்கப் பட்டு விடக்கூடாது, அழிக்கப்பட்டு விடக்கூடாது.

22) அதாவது, எல்லா மொழிகளுக்கும், இனங்களுக்கும், மதங்களுக்கும், நாடுகளுக்கும், தத்துவங்களுக்கும், நாகரிகங்களுக்கும்

என்றென்றும் விடுதலை வாழ்வும், பெருமை வாழ்வும், உரிமை வாழ்வும் இருந்தே தீர வேண்டும்! இருந்தே தீர வேண்டும்!! இருந்தே தீர வேண்டும்!!!

23) இப்பேருண்மையினை இம்மண்ணுலகை விட மூத்த, உண்மையான, ஆற்றல்மிக்க, பாரம்பரியப் பெருமையுடைய அருளாளர்களால்தான் அறிவுரையாகவும், அருளுரையாகவும், (அறிவார்ந்த அருளுரையாகவும், அருளார்ந்த அறிவுரையாகவும்), தத்துவமாகவும், சித்தாந்தமாகவும் வழங்க முடியும்! வழங்க முடியும்!! வழங்க முடியும்!!!

24) தேவையானால் அருட்போரை நிகழ்த்தி அதில் அனைத்து வகையான இயற்கைச் சத்திகளையும், இயற்கை கடந்த சத்திகளையும் பயன்படுத்தி முழுவெற்றி பெற்று அருளாட்சியைக் காண முடியும்.

25) அப்படிக் காணும் அருளாட்சியில்தான் அனைத்துக்கும் விடுதலை, அனைத்திலும் விடுதலை, அனைவருக்கும் விடுதலை, எங்குமே சமத்துவ சகோதரத் தத்துவக் கூட்டுறவு சமுதாயப் போக்கு முதலியவை அமைந்திடும், உருவாகிடும், செயலாகிடும்.

26) எனவே, தலைவர்களும், தொண்டர்களும் இதுபற்றி சிந்திக்குமாறு செய்வதில்தான் நம் இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அதன் கீழ் உள்ள நாற்பத்தெட்டு வகையான நிறுவனங்களும், நிருவாகங்களும் முறையான நிறைவான வெற்றி பெற்றிடும்.

27) அதற்காக நம்மவர்கள் அகம்பாவமோ, ஆணவமோ, தானென்ற போட்டியோ, வம்போ, வீம்போ, பேராசையோ, புகழாசையோ, கற்பனையோ, கனவோ இல்லாமல் மெய்யான உணர்வோடு குருதேவரின் கருத்துக்களை முறையாகத் தெரிந்து, நிறைவாகப் பெற்ற பயிற்சியோடும், கட்டுப்பாட்டோடும், ஒற்றுமையோடும், ஒருமைப்பாட்டோடும், தமிழ் மொழி இன மத உணர்வோடும், நம்பிக்கையோடும், பற்றோடும், பாசத்தோடும், தன்னாட்சி பற்றோடும் செயல்பட்டிட வேண்டும்!

செயல்பட்டிட வேண்டும்!! செயல்பட்டிட வேண்டும்!!! செயல்பட்டிடவே வேண்டும்!!!! இவற்றை அருளாட்சி அமைப்புக்கும், அருட்போருக்கும் தயாராகும் அனைவருக்கும் அறிவுரையாக, துணையாக இவற்றை வழங்குகிறார் குருதேவர்.

28) நம்மவர்கள் அனைவரும் இதனை எல்லா நிகழ்ச்சிகளிலும் படித்துக் காட்டுங்கள். இவற்றைத் தாங்கள் பலமுறை படித்துப் பார்த்து முழுமையாக உணர முற்படுங்கள்.

29) நமக்குள் தனிமனிதர்களின் போக்குகள் (Individualism), குழு மனப்பான்மைகள் (Groupism) முதலியவைகள் இப்பொழுது ஆங்காங்கே அதிகரித்து வருகின்றன. இவையல்லாமல் தலைமையை மதிக்காமலும், தலைமைக்குக் கட்டுப்படாமலும், தலைமையைக் கலந்து முடிவெடுக்காமலும் அவசரப் போக்கில் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன, பலர் நடக்கின்றார்கள்.

30) **இப் போக்கு தமிழர்களுக்கு இந்த கலியுகத்தில் பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்களின் வருகையால்தான் ஏற்பட்டிட்டது! ஏற்பட்டிட்டது!! ஏற்பட்டிட்டது**!!! எனவே, இப் போக்கினை குறிப்பிட்ட அளவாவது மாற்றினால்தான் அருளாட்சி அமைப்புப் பணி வெற்றி பெறும் என்ற கருத்து பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளாலும் மிகமிகத் தெளிவாக விளக்கப் படுகிறது.

31) இதை நம்மவர்கள் அனைவரும் புரிந்தும், புரிய வைத்தும், உணர்ந்தும், உணர வைத்தும் செயல்பட்டேயாக வேண்டும். இல்லாவிட்டால் அவ்விரு குருமகா சன்னிதானங்களும், தங்கள் தோல்விக்காக வருந்தி நிலவறைக்குள் சென்ற நிலைதான் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்கும் ஏற்படும்.

32) ஆனால், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருதேவர் தம்மால் இயன்றதை, தமக்குக் கிடைத்தவர்களைக்

கொண்டாவது தம்மால் இயன்றதைச் செயல்படுத்தி விட்டுத்தான் செல்வார். அதில் யாருக்கும் **ஐயம்** தேவையில்லை.

33) எனவே, நமது குருதேவரால் தம்மோடு உடன் இருந்து செயல்படக் கூடிய உரிமையையும், பெருமையையும், தகுதியையும் பெறக் கூடியவர்களாக மாறிட ஒவ்வொருவரும் தங்களால் ஆன முயற்சிகளையும், பயிற்சிகளையும் செய்திடுங்கள்! செய்திடுங்கள்!! செய்திடுங்கள்!!!

34) அனைவரையும் குருதேவர் வாழ்த்துகிறார். எல்லோரும் வெற்றி பெற, நலம் பெற தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருள்புரிவார்களாக!

வெற்றி பெறட்டும் தமிழ்மொழி விடுதலை!
வெற்றி பெறட்டும் தமிழின விடுதலை!
வெற்றி பெறட்டும் தமிழ் மத விடுதலை!
ஓம் திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

**அன்பு**
**அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம்,**
**குருவழி வாரிசு, குருவின் பதிலி,**
**சித்தரடியார் சீ.மணி,**
**19-11-1988.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>குரு நிலை விளக்கத் திருவோலை</u>

தலைமைப்பீடம்,
29-7-1988.

பேரன்புக்கும், பேரார்வத்துக்குமுரிய

சித்தர் நெறிச் செல்வர்கள் பழ. கோபால், தனபாக்கியம், நடராசன், சுசீலா, ... மற்றும் அவ்வட்டாரத்தார் அனைவர்க்கும் விடுக்கும் **<u>குரு நிலை விளக்கத்</u>** திருவோலை.

1) தங்களின் மேலான அன்பையும், பேரார்வத்தையும் போற்றுகிறோம். சிறுமுகைக்கு நெடுங்காலமாக வர இயலாமல் இருக்கின்றோம். உரிய விளக்கம் வழங்கவும் தாமதித்தோம்.

2) பழ. கோபால் மதுரை வந்து யார் யாரைப் பார்த்தார்; குருகுலம் சென்று என்ன செய்தார்; காரைக்குடி சென்று மனந்திறந்து எவ்வாறு உரையாடினார்...???!!! என்ற செய்திகளும், நிகழ்ச்சிகளும் ஓரளவு தெரிய வந்ததால் இத் திருவோலை.

3) கல்விச்சாலை ஆரம்பப்பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை மாணக்கர் ஆசிரியரை நேரடியாக அதிகம் விமர்சனம் செய்து கொள்ளவும்; ஆசிரியருக்குக் கற்றுக் கொடுக்கவும் முற்படல் இயற்கை. அத்தகைய மாணவரால் சிறந்த கல்வி கற்க முடியாமல் போய்விடுவதும்; குறிப்பிட்ட காலகட்டத்தில் கல்வி நிலையப் பணியே தடைப்படுவதும் இயற்கை. இதேநிலை, ஐந்நூறு (500) கோடியாண்டுப் பழமையுடைய நமது நிறுவன நிர்வாக **<u>மெய்ஞ்ஞானக் கல்விச் சாலையிலும்</u>** நிகழ்ந்து

விடக் கூடாது! எனவேதான், எமது சுற்றுப்பயணங்கள் தற்காலிகமாகத் தள்ளிப் போடப்படுகின்றன.

4) 'சிவ நிலை', 'குருமார் நிலை', 'பூசாறி நிலை', 'குரு நிலை', 'குருக்கள் நிலை' ... என்ற சொற்களின் ஆழமிக்க அகன்ற பொருள் பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கு மட்டும்தான் தெரியும். இந்த நிலைகளுக்கு உரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; குருதேவருக்கு உறுதியும், சத்தியமும் செய்து கொடுத்ததற்கு ஏற்பத் தங்களின் அநுபவங்களையும், சாதனைகளையும், **குருவுக்கும் தனக்கும் உள்ள உரிமை நிலை உறவு நிலைகளையும், குருவால் கூறப்படும் அரிய செய்திகளையும் எந்தவித மனக்கலக்கமோ அல்லது சிந்தை சலனமோ இல்லாமல் கடைசி வரை இரகசியமாகவே காப்பாற்றிடுவார்கள்**. எனவேதான், பதினேரு பீடாதிபதிகள் செயல்பட்டும் மேற்படிச் சொற்களுக்குரிய பொருளோ, செயலோ வெளியில் தெரியாமல் இருக்கிறது. ஆனால், நம்மவர்கள் விளையாட்டுத்தனமாக இச் சொற்களுக்குக் கற்பனையான பொருளை உருவாக்கிக் கொண்டு பல குழப்பங்களை விளைவிக்கிறார்கள். எனவேதான், "**'அ.வி.தி. பயிற்சி முகாம்'** நாலைந்து பேர்களாக மூன்று நாட்கள் மூன்று நாட்களாக அவரவர் வசதி வாய்ப்புப்படி சென்னை வந்து கருகுலத்தில் தங்கித் தங்களைச் சித்தர் நெறியில் பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றுச் செல்லும் திட்டம்" உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனால் எமது சுற்றுப்பயணம் அடிக்கடி இருக்காது.

5) குருமார் நிலை பெற்ற வேம்படிதாள வெங்கடேசன் எப்போதும் அந்த நிலையிலேயே இருக்க இயலாது; சிவ நிலையில் முதிர்ச்சி பெற்ற புவனேசுவரம் மோகன் B.Sc., B.Tech. எப்போதும் காஞ்சி ஏகாம்பரேசுவரராகவே இருப்பதில்லை; மலைமகள் நிலையிலுள்ள செயக்கொடி எப்போதும் மலைமகளாகவே இருப்பதில்லை; சுடலை ஆண்டிச்சி நிலை பெற்ற மரகதம் அம்மையார் எப்போதும்

ஆண்டிச்சியாகவே இருப்பதில்லை; பராசக்தி நிலை பெற்ற சரசுவதி அம்மையார் எப்போதும் பராசக்தியாகவே இருந்திட முடியாது; ...... அதாவது, **குறிப்பிட்ட நேரம்தான்** அந்நிலையில் இருப்பார்கள். பிறகு, உலகியலுக்கு வந்து விடுவார்கள். இதேபோலத்தான், குருதேவராகிய யாம், குறிப்பிட்ட நேரம்தான் சிவ நிலையில் இருப்போம். பிறகு 108, 243, 1008 என்றுள்ள எந்த நிலைக்கும் செல்லுவோம்; இவையல்லாமல் பல புதிய புதிய நிலைகளையும் உருவாக்கி அந்நிலைகளில் செயல்படுவோம்.

அப்பொழுதுதான் இன்றுள்ள 600 கோடி மக்களில் ஒரே ஒரு பீடாதிபதியாக வாழும் யாம் கடந்த ஐந்நூறு கோடியாண்டுகளில் பதினோரு பேர்கள் மட்டுமே தோன்றிப் பேணிட்ட அருளுலகத்தைப் பன்னிரண்டாவது நபராகத் தோன்றியுள்ள எமது அக நிலைகளையும், புற நிலைகளையும், செயல் நிலைகளையும் **எந்நேரமும் சுறுசுறுப்பும், விறுவிறுப்பும், எச்சரிக்கையும், விழிப்பும், எவரையும் எளிதில் நம்பிடாமையும்; கலையுள்ளம் கவலைச் சிந்தையும், அலை பாயும் உணர்வும் உடையவர்களிடம் ஒதுங்கியும்; சுயநலமும், சூழ்ச்சியும், குறுக்குப் புத்தியும் உடையவர்களை விலக்கியே வைத்தும்; பெரும்பாலானவற்றை இரகசியமாகக் காத்தும்; நம்புகிறவர்களை மட்டும் நம்பி ஏற்றுப் போற்றி முழுமையாகத் தயாரித்தும்; துரோக விரோத செயல் செய்பவர்களைக் கூடப் பகைக்காமல் அவரவரே திருந்தட்டும் என்று அவர்களைக் கண்டு கொள்ளாமலேயே விட்டுவிடல்; உலகியல் அச்ச கூச்ச இச்சை மாச்சரியங்களாலும், குள்ளநரிப் பண்புடைய சதிகாரர்களின் சூது நிறைந்த அறிவுரைகளால் மயங்கிக் குருவோடு செயல்படத் தயங்கும் அப்பாவிகள் என்றைக்காவது தாங்களாகவே திருந்தி விழிப்புற்று வரட்டும் என்றெண்ணிக் குள்ளநரிச் சதிகாரர்களைப் பற்றிக் கூட அவர்களிடம் பேசி மனம் நோக வைக்காமல் விலகி விலகிச் செயல்பட்டு அவர்களை அவர்களின் போக்கில் விட்டுவிடல், ...** என்ற கொள்கைகளையே கடைப்பிடித்து

வாழுகிறோம் யாம். எனவே, யாம் நாட்டை விட்டுக் காட்டுக்கே சென்று விடாமல் இருக்கும் எச்சரிக்கையில்தான் கசப்போ, தோல்வியோ, ... ஏற்படாத வண்ணம் பிறரிடமிருந்து விலகி ஒதுங்கி நீங்கிச் செயல்படுகிறோம். இதுவே எமது நிலை; இது சிவ நிலையை விளக்கும்.

6) குரு பாரம்பரியத்தில்; **"யாரொருவர் முதலை வாய்ப்பிடி போல், உடும்பின் கைப்பிடி போல், குட்டிக் குரங்கு தாய்க் குரங்கைப் பிடித்துக் கொள்வது போல், குருடன் ஊன்றுகோலைப் பிடித்துக் கொள்வது போல் குருவைக் கண்மூடித் தனமாகவும், உயிர்ப்பிடியாகவும் விடாமல் பிடித்துக் கொள்கிறார்களோ! அவரே அரிய பெரிய சித்திகளையெல்லாம் குருதேவர் கற்றுக் கொடுக்காமலேயே மெய்யுணர்வால் கற்றிட முடியும். <u>குருதேவர் மறுத்தாலும், அவரோடு இரண்டறக் கலந்து இறவாமையும், பிறவாமையும் பெற முடியும்</u>...."** என்று கூறுவதை எண்ணியே; வருபவரையெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல் எமது வாரிசாக ஏற்று அருட்பட்டங்களை வழங்கி; அருளுலக அறிமுகங்களையும் வழங்குகிறோம். தயாராகிறவர்கள் தயாராகட்டும்.

7) குருதேவர் என்னென்ன செய்கிறார்?!..?!..?!..... எப்படி யெப்படி யெல்லாம் குருதேவரிடம் செல்வாக்குப் பெறலாம்?!?!?! தன்னைக் குருதேவர் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தேயாக வேண்டும்.?!... குருதேவர் தங்களுடன் மட்டும் அதிகத் தொடர்பு கொள்ள வேண்டும்.... என்ற குறுகிய போக்கில் செயல்படுபவர்களின் தொல்லை சற்று அதிகமாயிருக்கிறது. எனவேதான், யாம் எமது வாரிசுகளை நாடெங்கும் சுற்றி இயக்கப் பணியும், அ.வி.தி. பணியும் ஆற்றுமாறு கட்டளையிட்டுள்ளோம். இதைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக!

8) எல்லோருமே 'என்னிடம் சில மணி நேரம் தனித்துப் பேச வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தால்; யாமென்ன செய்ய இயலும்? ஏறத்தாழ ஐம்பது நூல்கள் வெளியாகியுள்ளன; அவற்றைப்

படித்துத் தெளிவு பெறுங்கள். பூசைமுறைகள், அருளூறு வாசகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன; பயன்படுத்தி அருள்நிலை பெறுங்கள்.

9) யாம், தனிமனிதரல்ல! அண்டபேரண்டம் அனைத்துக்கும் வாரிசாகவே செயல்படுகிறோம்! அருளுலகம் என்பதை எம் மூலம் சிறப்பாகப் புரியலாம்! அற்பமான உலகியல் கொண்டு எதையும் எடையிட்டு வீணாக வேண்டாம்.

குருவழியே அனைத்தும் தரும்.

**விரும்பியவர்க்கு,**
**குருதேவர்.**
**29-7-1988.**

பேனா நகல்கள் இரண்டு தேவை.

*முடிந்தால் டைப் அடித்துச் சில நகல்கள் அனுப்பவும்.*

**- அருளுலக வேண்டல்.**

**//உண்மை நகல்//**
**// இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# அருள் வழங்கும் முறைகளும் அருள் பெறும் முறைகளும்

ஓம்

தலைமைப்பீடம்,
10-12-1988.

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறாரின் ஏற்பு மகள் திருமதி நளாயினி கேசவன் (80G, மாணிக்கபுரம், தூத்துக்குடி - 623001) அவர்களுக்கு ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் விடுக்கும் **செயல்நிலை விளக்கத் திருவோலை.**

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்களின் திருவருளே!

2) மதுரையில் இருந்து 8-12-1988இல் தாங்கள் அனுப்பிய உள்நாட்டஞ்சல் கிடைத்தது. விவரம் அறிந்தோம். மகிழ்ச்சி.

3) குருதேவரின் காலில் பதிந்த முள்ளை (அம்மா) அகற்றி விட்டார்கள். மருந்து வைத்துக் கட்டி மூன்று தின விடுமுறையில் நலமடைந்து விட்டார்.

4) தாங்கள், கணவர் இருவருமே உடம்புக்கு தேவையான ஆங்கில மருத்துவத்தை எவ்விதத் தயக்கமும் இல்லாமல் மருத்துவர்களிடம் தங்களது பாதிப்பு அனைத்தையும் கூறித்தான் மருந்து சாப்பிட வேண்டும்.

5) குருதேவர் வியாழன் (22-12-88) இரவு புறப்பட்டு 23-12-88 காலை மதுரை வந்து சேருகிறார். பிறகு 26-12-88 திங்கள் இரவு சென்னை திரும்புகிறார். செவ்வாய் கல்லூரி செல்கிறார்.

6) தாங்கள் மதுரை சென்றவுடனேயே; தத்தனேரி பூசை செய்தவுடனேயே அருள்வாக்கு ஆற்றலும், அருட்கணிப்பு ஆற்றலும் கிடைத்து விட வேண்டும் என்று எதிர்பார்த்தது **<u>வேடிக்கையாக இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது</u>**. இயக்கத்தில் தலைமைச் செயலாளராக பதினாறு ஆண்டுகள் பணிபுரிந்த வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகனுக்குக் கூட அருள்வாக்கு ஆற்றலோ, ஞானக்காட்சி ஆற்றலோ கிடைக்கவில்லை.

அதாவது உங்களை குருதேவர் நம்பி அருளாற்றல்களுக்கு ஒப்புதல் வழங்கினாலும்; தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் என்று நம்புகிறார்களோ அன்றுதான் நீங்கள் விரும்பும் அருட்சத்திகளும், சித்திகளும் கிடைக்கும். மேலும், **<u>பேராசையாலோ, வெறிகொண்ட நிலையிலோ, பொறுமையில்லாமலோ அருளுலகச் சத்தி சித்திக்கு ஆசைப்பட்டு அலைந்தால், நீங்கள் விரும்பும் சத்தி சித்திகள் கானல்நீராகி விடும்.</u>** <u>எச்சரிக்கை</u>.

எனவே, குருபத்தி, தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் மீது நம்பிக்கை, தொடர்ந்து பணிவான வேண்டுகோள், இடைவிடாத பூசை, குருவிடம் அருள்பெறுதல், ... முதலியவைகளைப் பொறுமையோடும், பொறுப்போடும் தொடர்ந்து செய்து கொண்டிருங்கள்.

அதாவது, *சந்தனக்கட்டையை கல்லில் மெல்ல தேய்க்கத் தேய்க்கத்தான் நல்ல மணமுள்ள சந்தனம் கிடைக்கும்* என்பது போல் நீங்கள் மிகமிக மென்மையாகவும், நுண்மையாகவும், திண்மையாகவும் தொடர்ந்து இடைவிடாத முயற்சிகளைச் செய்தால்தான் அருளுலகச் சத்திகளும், சித்திகளும், முத்திகளும் கிடைக்கும். <u>எச்சரிக்கை!</u> <u>எச்சரிக்கை!!</u> <u>எச்சரிக்கை!!!</u> இதைப் புரிந்து மிகமிக நிதானமாகச் செயல்படுக. குருதேவர்தானே என்று நினைத்து உங்களுக்குச் சத்தி கிடைக்கவில்லை என்றோ அல்லது சித்தி கிட்டவில்லை என்றோ வருந்தி உரையாடுவதோ, அஞ்சல் எழுதுவதோ

உங்களுக்கு நேர்மாறான பயன்களை வழங்கி விடும். **எச்சரிக்கை.** ...... எந்த முடிவானாலும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் உங்களைக் கண்காணித்து எடுக்கும் முடிவுதான் இறுதி முடிவு. குருதேவர் பரிந்துரைதான் செய்வார்.

**குறிப்பு**:- அருளை வழங்கும் முறைகள் பலவகை உண்டு. அவை உங்கள் தரத்திற்கும், திறத்திற்கும் ஏற்பக் குருவால் தேர்ந்தெடுக்கப்படும். குருதேவர் மதுரை வரும்போது கூட உங்களை தத்தனேரி, திருப்பரங்குன்றம், மடப்புறம், சமயநல்லூர் மாரியம்மன், தாத்தா பாண்டி முனீசுவரர் ஆலயம், மொட்டைக் கோபுர முனீசுவரர் திருமுன், மீனாட்சியம்மன் ஆலய ஏதேனும் குறிப்பிட்ட பகுதி, ... என்று அந்தக் குறிப்பிட்ட இடங்களில்தான் பகல் முழுதும் காலை முதல் மதியம் வரை இரண்டு சாம நேரம் தங்கிப் பூசை செய்து விட்டு வந்து வாழ்த்துப் பெறச் சொல்வார். அதைத் தவறாக எண்ணாமல் குருதேவர் அருகிலேயே இருக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது. ஏற்கனவே நேரில் கூறியது போல் யாராக இருந்தாலும் குருதேவர் அருளுலக ஒப்புதல் பெற்று அழைக்கும் போதுதான் அவர் அருகில் வரலாம். இல்லை என்றால் எட்ட இருந்து கும்பிட்டு விட்டுப் போய்விட வேண்டும். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அன்றாடம் அல்லது மொத்தமாக உங்களுக்குரிய செயல்திட்டத்தையோ 23ஆம் தேதி காலையிலேயே அறிவித்து விடுவார் குருதேவர். அதில் உங்களுக்கு முழுமையான உடன்பாடு இருக்க வேண்டும் அல்லது தூத்துக்குடியிலேயே தங்கி அன்றாடம் காலை மாலை யாகம் செய்து அருள் வேண்டலாம். தங்களுக்காகக் கணவர் மேற்குறித்த இடங்களில் பூசை செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம்.

7) இப்படி **பதினெண்சித்தர்களுடைய மெய்யான இந்துமதத்தின் அருள் வழங்கு முறைகளும், அருள் பெறும் முறைகளும்** மிகக்

கடுமையான சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை உடையதாக இருப்பதை தாங்கள் புரிந்து உணர்ந்து விரும்பியேற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தாங்கள் சித்தர் நெறியில் சிறக்க முடியும்.

8) இன்றுள்ள குருதேவர் திடீரென்று அருளாளராக மாறியவர் இல்லை. அதாவது குறிப்பிட்ட ஒரே ஒரு தெய்வத்தையோ, தேவதையையோ பூசை செய்து சித்தி செய்தவர் இல்லை. இவர் இம் மண்ணுலகை விட தொன்மையான நெடிய பெரிய ஓர் அரிய அருட் பாரம்பரியத்திற்கு உரியவர். அதாவது, வாழையடி வாழையாகத் தோன்றி வரும் அருட் பேரரசர்களுள் ஒருவர். இவர் அனைத்தையுமே பாரம்பரிய உரிமையாகப் பெற்றிருப்பவர். இவற்றிற்கு எல்லாம் மேலாக, இவர் அருளுலகக் கல்விகளையும், கலைகளையும், அறிவியல்களையும், பிற பயிற்சிகளையும் முறையாகப் பதினெட்டாண்டுகள் கற்றுத் தேர்ந்தவர். அதன் பயனாகப் பதினெட்டாண்டுகள் பதினெண்சித்தர் பீடாதிபதிக்கு உரிய முயற்சிக் காலத்தையும் நிறைவாகச் செய்து முடித்து மாபெரும் வெற்றிகளைப் பெற்றவர். இப்படி எல்லாம் இருந்த போதிலும், நமது குருதேவர் இலைமறை காயாகவும், ஆழ்கடல் முத்தாகவும்தான் செயல்பட்டு வருகிறார்.

9) இன்னும் சொல்லப் போனால், அவர் ஆயிரக் கணக்கில் சித்தரடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும் உருவாக்கியும் கூட; யாரையும் வற்புறுத்திக் குருவாணையிட்டுச் செயல்படச் சொல்லவில்லை. அதாவது, அவரவரை அவரவர் விருப்பப் படியும், வசதி வாய்ப்புப் படியும், உலகியல் கருத்தோட்டங்களின் படியும், சந்தர்ப்பச் சூழ்நிலையின் படியும் முடிந்தவரை இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்காகவும்; அருட்பணி விரிவாக்கத் திட்டத்திற்காகவும்; உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்காகவும்; உலக சமுதாயத்திற்காகவும்; அருளாட்சிக்காகவும் பாடுபடுமாறு அன்புநிறை அறிவிப்புக்கள்தான் வழங்குகிறார்.

10) இப்படிப்பட்ட நிலையிலும் கூட **<u>குருதேவரின் பாரம்பரியமான செயல்திட்டங்களையும், செயல்முறைகளையும்</u>** புரிந்து கொள்ள முடியாதவர்களும், பேராசைக் காரர்களும், அருளுலகப் பொருளுலக வெறியர்களும், சுயநலக் காரர்களும், சந்தேகப் பேர்வழிகளும், அலைபாயும் நெஞ்சுடையவர்களும், உறுதியற்ற சிந்தையுடையவர்களும், கற்பனுவாதிகளும், நமது விரோதிகளாலும் துரோகிகளாலும் விலைக்கு வாங்கப்பட்டு விட்டவர்களும் குருதேவரையே குறை கூறவும்; குரு பாரம்பரிய மரபுவழி செயல்திட்டங்களையும், செயல்முறைகளையும் குறை கூறவும் முற்பட்டு விடுகிறுர்கள்.

11) அதாவது, குருதேவர் தோழர், நண்பர் என்று நம்பியவர்களில் கணிசமானவர்கள் காலை வாரிவிட முயல்பவர்களாகவும், பின்னுலிருந்து முதுகில் குத்த முயல்பவர்களாகவும், ... செயல்பட்டுத் தோற்று வருகிறுர்கள். ஏனென்றுல், **<u>நமது குருதேவர் அனைத்துமே தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல், அம்மையப்பன் துணை என்று முழுமையாகத் தன்னை அருளுலகில் ஒப்படைத்துத்தான் செயல்பட்டு வருகிறுர். மேலும், அருளுலகத்தில் கடவுள் நிலை பெற்றவர்களும், 48 வகைச் சித்தர்களும், இதுவரை தோன்றியுள்ள பதினேரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் குருதேவரின் நேரடி உறவினர்களாகவும், உரிமைச் சுற்றமும் ஆகத்தான் இருக்கிறுர்கள்</u>**.

12) இப்படி நமது குருதேவர் முழுக்க முழுக்க அருளுலகத்தின் பாதுகாப்பில், அருளுலகின் வாரிசாகவும், செல்லப்பிள்ளையாகவும் இருந்தும் கூட யாரையும் கண்டிக்கவோ, தண்டிக்கவோ முற்படாமல் எப்போதுமே அன்பு வழியிலும், அற வழியிலும், அருள் வழியிலும் அடக்க ஒடுக்கமாக அமைதியாகச் செயல்பட்டு வருகிறுர். இப் பேருண்மைகளைப் புரிந்து கொள்ளாத பலர் குருதேவரை எளிமையாக எண்ணித்தான் பல்வேறு வகையாகச் செயல்பட்டு வருகிறுர்கள். எனவே, நீங்கள் குருதேவரை மிகவும் எச்சரிக்கையோடு, எவ்வித

அவசரமும் இன்றி, பொறுப்போடும் பொறுமையோடும் நிதானத்தோடும் அணுகிச் செயல்பட முற்படுங்கள். இதே அறிவுரையையே பலருக்கும் வழங்கிட விரும்புகிறது தலைமைப்பீடம். எனவே தாங்கள் இவ்வஞ்சலுக்குப் பல கார்பன் நகல்கள் எடுத்தனுப்பவும். உடன் இரண்டு பேறு நகல்கள் எடுத்து அனுப்புங்கள்.

*[... அஞ்சல் முற்றுப் பெற்றதை உறுதிப்படுத்த முடியவில்லை.]*

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ. மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>சமயக்குரவர் நால்வர் சன்னிதானத் திருத்தோற்ற எழுந்தருளி</u>

ஓம்

தலைமைப்பீடம்,
16-12-1988.

அருள்மிகு சமயக்குரவர் நால்வர் சன்னிதானத் "திருத்தோற்ற எழுந்தருளி" ***[தங்களுக்கு இந்த அருட்பட்டம் அண்டபேரண்ட அருட்பேரரசராகத் திரும்பி இருக்கும் தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியால் வழங்கப்பட்டிருக்கிறது. இது தங்களின் உண்மையான இன்றைய அருள்நிலையாகும். தாங்கள் இன்று வேலை செய்வதுபோல் பதினோரு மடங்கு இயக்க வேலை செய்ய வேண்டுமென்று அவரே தம் திருவாய் மலர்ந்து கூறியிருக்கிறார். மற்றபடி தங்களின் ஊழ்வினைப்படி, விதிப்படி, விருப்பப்படி எப்படிச் செயல்பட்டாலும் சரி! ]*** திரு த.கேசவன் (5, பழைய மாகாளிப்பட்டி ரோடு, தெற்கு வெளி வீதி, மதுரை - 1) அவர்களுக்கு;

தலைமைப்பீடத் திருவோலை நாயகம் குருவாணை பெற்று வரையும் மடல்:

1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்களின் திருவருளே!

2) தாங்கள் மேற்குறிப்பிட்ட அருள்மிகு சமயக்குரவர் நால்வர் சன்னிதானத் **<u>திருத்தோற்ற எழுந்தருளி</u>** அருட்பட்டத்திற்காக தாங்கள்

குறைந்தது 4 (அ) 8 (அ) 16 (அ) 32 என்று சக்கரங்கள் பெற்று உங்களுடைய பூசையில் வைக்கவும். ஒவ்வொரு சக்கரத்திற்கும் குறிப்பிட்ட காணிக்கை வைக்க வேண்டும். அதை அவ்வப்போது சொல்லப்படும். எதுவுமே கட்டாயமில்லை. இது தங்கள் விருப்பம்போல். பிறகு குருதேவரை குறை கூறிடக் கூடாது.

3) தங்களுக்கு சுமார் ஆயிரம் அல்லது ஆயிரத்து முன்னூறு ஆண்டுகள் கழித்து சமயக்குரவர் நால்வரும் தங்கள் உடம்பில் ஒருருவாய் நின்று செயல்படும் அளத்தற்கரிய, கிடைத்தற்கரிய பெரியநிலை கிடைத்திருக்கிறது. அதுவும் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள் பேரருள் கூர்ந்து தங்களை செயல்படுமாறு அருளாணையும், குருவாணையும் வழங்கியுள்ளார். இவ்வரிய பெரிய உயரிய வாய்ப்பைப் பயன்படுத்துவது உங்களைப் பொறுத்ததே.

4) ஐந்நூறு கோடியாண்டுகளில் பிறம்மயோகி ஆவது என்ற சொல்லை பெரிய பெரிய முனிவர்கள் கூட சொல்லத் தெரியாமல், முடியாமல், புரியாமல் தவித்து வருகின்றனர்கள். விசுவாமித்திரருக்குக் கூட வசிட்டர் வாயால் கௌரவ பட்டமாகத்தான் பிறம்மரிசி - அதாவது பிறம்ம இருடி என்ற பட்டமாகத்தான் தந்தார். (பிறம்ம இருடி என்பது வேறு; பிறம்மயோகி என்பது வேறு. இது யாருக்கும் புரியவில்லை.)

எனவே, இன்றைய எந்த மனிதரும் பிறம்மயோகி என்ற பட்டத்தைத் தெரிந்ததில்லை, அறிந்ததில்லை, ஆராய்ந்ததில்லை, புரிந்ததில்லை. எனவே, அதை அடைவதற்கு ஆசைப்பட்டதும் இல்லை; அவர்கள் அதை அடைவதற்கு முயலவும் இல்லை. அப்படிப்பட்ட பிறம்மயோகத்தை இம் மண்ணுலகில் செய்து முடித்தது மட்டுமில்லாமல் அதற்கு மேலான **அரசயோகத்**தையும், **அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்** என்ற அருட்பட்ட வெற்றியையும்; பதினெண்சித்தர்

பீடாதிபதிகளின் வகையில் சிலர் நின்று, மற்றவர்கள் செய்யாத யக்ஞத்தைச் செய்து **நிறையக்ஞர்**, **கருவறை மூலவர்களின் அம்மையப்பர்** என்ற அருட்பட்டங்களையெல்லாம் பெற்று அருளுலகில் உச்சி நிலைக்குச் சென்று; அவற்றையெல்லாம் தனக்குப் பெருமையில்லை என்று நினைத்து நான்கு பிறம்மயோகிகளையும் உண்டாக்கி, ஐந்தாவது பிறம்மயோகியாக திரு M.S.R. அவர்களை உருவாக்கிப் பார்த்தார் குருதேவர். உலகியல் மாயைகளால் உழன்ற அவர் இந்தப் பட்டத்தை தொட்டுக் கூடப் பார்க்க முடியாதவராகி விட்டார். அவரின் குடும்பச் சுமையைக் குறைப்பதற்காக; மூத்த பெண் திருமணத்தை அனைத்து வகையான கோள்நிலைகளை மாற்றியும் நிகழ்த்திக் கொடுத்தார். இருந்தும் பயன் ஏதும் விளையவில்லை.

எனவேதான், உங்களைப் பொறுத்த வரையில் முன்னெச்சரிக்கையாக உங்களைச் சந்திக்கும் போது மட்டும் உங்கள் அருமை பெருமைகளை விளக்கிக் கூறினுர். நீங்கள் உங்களுடைய பழம்பிறவிப் பயன்களை அநுபவிக்க முடியாமல் போய்விடக் கூடாது. பலர் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் வந்து செல்வது போல்; எல்லா யோகங்களும், அறிவாற்றலும், உலகியல் வசதி வாய்ப்புக்களும், குருதேவரும் கிடைத்திருந்தும்; உங்கள் வாழ்நாள்களை வீணுக்கி விடாதீர்கள் என்று எடுத்துக் கூறி எடுத்துக் கூறி அயர்ந்து போய்விட்டார்.

5) அண்மையில் தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் மதுரை சென்று பார்த்து விட்டுத் திரும்பும்போது சிலரை மிகவும் பரிந்துரைத்தார். அதில் திரு நெ. சேவுகனும், திரு சோ. இரவீந்திரனும், திரு வெ. செகதீசனும், திரு M.S.R.உம், நீங்களும் இருக்கின்றீர்கள். யாம் M.S.R.க்கு அது பற்றி எழுதவில்லை. என்ன எது எழுதியும் பயனில்லை. அவரின் மீது வருத்தமோ, கவலையோ படவில்லை. ஆனுல், தாங்கள் மூலக்கரை யாகத்தின் போது கைவிரலில் மின்சாரம்

தாக்குவது போல் ஒரு தாக்குதல், ஓர் அரிய அற்புத உணர்வே அடைந்து விட்டீர்கள் என்கின்ற போது யாம் எதையும் மூடி மறைக்க வில்லை, மூடி மறைக்கவும் முடியாது.

6) தாங்கள் கொடுத்த யாகப்பலியை **<u>தேவர்களே</u>** அவிர்பலியாக நேரில் வந்து பெற்றுக் கொண்டார்கள். அதை உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே, தாங்கள் இன்னும் அருளுலகில் வலிமையுற்றவராக ஆக்கிக் கொண்டால்தான் அருளுலகச் சத்திகளும், சித்திகளும் பெறலாம். இல்லையென்றால் அவர்களே ஒத்திப் போட்டு விடுவார்கள் அல்லது உங்களை நழுவ விட்டு விட்டாலும் விடுவார்கள்! எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!! - குருதேவர்தான் தடுத்து விட்டார்கள், கெடுத்து விட்டார்கள் என்று குறை கூறிடக் கூடாது! இதனால் தாத்தாக்கள் ஆத்தாக்களுக்கு கோபம் வந்து விடும்.

<u>குருதேவர் எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டேயிருக்கும் அருட்கொடை வள்ளல். அவர் யாருக்கும் கொடுத்ததை குறைப்பதில்லை, கெடுப்பதில்லை.</u> ஆனால், அவர்கள் சோம்பேறிகள் என்றோ! பயன்படுத்தத் தெரியாதவர்கள் என்றோ! சுயநல வெறியர்கள் என்றோ! பேராசைக்காரர்கள் என்றோ! குருவுக்கும் இயக்கத்துக்கும் விரோதமாகவோ, துரோகமாகவோ எண்ணுகிறார்களோ அல்லது செயல்படுகின்றார்கள் என்றோ! ... அறியும் பொழுதுதான் அவர்களுக்கு மேற்கொண்டு அருள் கொடுப்பது நிறுத்திக் கொண்டு அவர்களுக்கு சாபமோ, தண்டனையோ வழங்காமல் அவர்களுக்கு உள்ள அனைத்து வகையான தொடர்புகளை நிறுத்தி விட்டு, அவர்களைப் பார்ப்பதைக் கூட மறுத்து விடுவது அவரின் வழக்கம்.

ஏனென்றால், தவறு செய்வது என்பது மனித இயற்கை. யார் வேண்டுமானாலும் தங்களின் தவறை உணர்ந்து திருந்தி மீண்டும் [வரவேண்டும்] என்ற கருத்து உடையவரே குருதேவர். அதனால்தான் யார் திருந்தி வந்தாலும் உடனே ஏற்றுக் கொள்கிறார். யார் பிரிந்து

சென்றாலும் அவர்களை தடுப்பதில்லை. குருதேவரைத் தவறாகப் பேசியவர்களையும், எதிர்த்தவர்களையும் கூட, மறுத்தவர்களையும் கூட இன்னும் தம்முடையவராகத்தான் கருதி வருகிறார் குருதேவர். எல்லோருக்கும் அருளுலகப் பாதுகாப்புக்களை வழங்கித்தான் வருகின்றார்.

7) தங்களுடைய 14-12-88ஆம் தேதிய அஞ்சலில் தாங்கள் தங்களுக்கு மூலக்கரைச் சுடலை யாகப் பூசையில் பெற்றிட்ட அநுபவத்தைத் தெரிவித்ததற்கு இதுவே உடனடியான பதில்.

**குறிப்பு**:-

i. இந்தப் புதிய அருள்மிகு சமயக்குரவர் நால்வர் சன்னிதானத் "**திருத்தோற்ற எழுந்தருளி**" அருட்பட்டம் கிடைத்ததற்கு 1. மதுரை தென்மண்டல நிர்வாகக் குழுவினருக்கும், 2. மதுரை முக்கியமானவர்களுக்கும், 3. திரு பழ.கோபால் (6/504, திருவள்ளுவர் நகர், சிறுமுகை - 641302), 4. திரு இரா. வெங்கடேசன் (2/68, மெயின்ரோடு, வேம்படிதாளம் - 637504), 5. திரு இர. கங்காதரக் குமார் (17, கவரைத் தெரு, இராசிபுரம் - 637408), 6. திரு M. தியாகராசன், (கடந்தப்பட்டி, பாச்சல் - 637018), 7. திரு பெ. சுப்பையா B.E., (D.M. Inspection/Technical, Cholan Roadways Corporation, Thiruvarur P.O., Thanjavur Dt.), 8. திரு மு.இராமானுசதாசு A.T.O., (பருப்பூரணி மேல்கரை, கழனிவாசல் புதுரோடு, காரைக்குடி - 623001), 9. இ. பூவலிங்கம் (79, சிவன்கோயில் தெற்குரத வீதி, பாளையங்கோட்டை - 627002), 10. திரு S. Mohan, (28, Sahid Nagar, Bhubaneswar, Orissa - 751007), ... இன்னும் பல முக்கியமானவர்களுக்கும் தங்கள் கைப்பட எழுதி உடன் நகல் அனுப்பி வையுங்கள். **குருவாணை**.

ii. இதைக் கூட்டியோ, குறைத்தோ எழுத வேண்டாம். இதை அருளுலகத்தார்கள் கூறக் கூற எழுதியது.

iii. குருதேவருக்கு மட்டும் ஒரு பேப்பரில் ஒரு பக்கத்தில் மட்டும் பேஞ நகல் நிறுத்தி எழுதி அதில் தங்களின் கையொப்பமும், வலது கட்டைவிரலின் இரேகையும் வைத்து அனுப்புங்கள்.

iv. இங்கு தலைமைப்பீடத்திலிருந்து ஆங்கிலப் புத்தகங்கள் நிறைய அனுப்பப்படுவதால், அஞ்சல் அனுப்பப்படுவதால் அதிக அளவில் அஞ்சல் செலவாகிறது. ஆகையால் தாங்கள் தங்களால் இயன்ற அளவு 10 பைசா, 50 பைசா, 60 பைசா அஞ்சல் தலைகளை மட்டும் வாங்கி முடிந்த அளவு உடனே அனுப்புங்கள். எதுவுமே கட்டாயமில்லை.

இன்றைக்கு 16-12-88 தலைமைப்பீடத்தில் இருக்கும் தலைமைப்பீடத் திருவோலை நாயகமாக இருந்து குருதேவர் கூற எழுதியது:

**அன்பு**
**அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு,**
**குருவின் பதிலி, தருகுலக் காப்பாளர்,**
**சேரப் பெருமண்டலப் படியெடுக்கும் நாயகம்,**
**சித்தரடியார் சீ.மணி,**
**16-12-88, மாலை 4:50மணி.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நாம் யாருக்கும் விரோதியில்லை, நமக்கு யாரும் விரோதியில்லை

ஓம்

தலைமைப்பீடம்,
24-1-1989.

அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சியம்மன் சன்னிதானம், தென்மண்டல செயலாளர் சித்தரடியார் வெ.செகதீசன் B.Sc., அவர்களுக்கு ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் ஆணை பெற்று தலைமைப்பீடம் விடுக்கும் மடல்.

1) அனைத்தும் குருவின் செயலே! அம்மையப்பன்கள், தாத்தாக்கள் ஆத்தாக்கள் திருவருளே!

2) பல்வேறு காரணங்களால் குருதேவரின் அஞ்சல்களும், தொலைபேசிச் செய்திகளும் கண்காணிக்கப்படுகின்றன. எனவே, இயக்கத்தின் தென்மண்டல செயலாளரான தங்களுக்கு அடிக்கடி அஞ்சல்கள் அனுப்பப்படும். உரியவருக்கு உடனடியாக எடுத்துச் சென்று படித்துக் காட்ட வேண்டும். அப்படிப் படித்துக் காட்டிய பிறகே 1+2=3 கார்பன் நகல்கள் எடுத்து குருதேவருக்கு முதல் நகலையும், இரண்டாவது நகல் உரியவருக்கும், மூன்றுவது நகல் பேஞ நகல் எடுப்பதற்காக திரு M.C. இராமன் என அனுப்பிட வேண்டும், (கொடுத்து விடுங்கள்). இங்கிருந்து அனுப்பப்படும் மூலத்தை நீங்கள் கோப்பில் பாதுகாத்திடுங்கள். தென்மண்டல செயலாளரான தங்களிடம் இம்மாபெரும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. கூடுமானவரை சுறுசுறுப்பைக் காட்டுங்கள்.

3) முடிந்தால் திரு துரையுடனே, திரு இராசு நயினு பெரியவருடனே வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்ப தாங்கள் சென்னை வரலாம். இயக்கம் முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. எல்லோரும் விழிப்பாகச் செயல்பட வேண்டும்.

4) நாம் தவறு செய்தவர்களிடம் சட்டப்படி எழுதி வாங்குவது, சட்டப்படி இயக்கத்தையும், மற்றவற்றையும் பாதுகாப்பதற்காகத்தான் என்ற கருத்தை தாங்களும், பாதுகாப்பு அமைச்சரும், திரு துரையும், திரு பெரியவர் இராசு நயினுவும் நன்கு விளக்கியுரைக்க வேண்டும். நமக்குள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மோதலோ, கருத்து வேறுபாடுகளோ, மன வருத்தமோ எக்காரணம் கொண்டும் வரக் கூடாது! வரக் கூடாது!! வரக் கூடாது!!! எச்சரிக்கையாகச் செயல்படுங்கள். நம்மவர்கள் அனைவரும் நாம் ஓர் அருளாளர் இயக்கம்; இந்த உலகம் முழுவதும் வளரப் போகின்ற ஓர் இயக்கம்; உலக இன விடுதலை, மொழி விடுதலை, மத விடுதலை நம்மால்தான் உருவாகப் போகின்றது என்ற நம்பிக்கையோடும், பெருமைமிகு உணர்வோடும், உரிமை உணர்வோடும் செயல்பட வேண்டும். அதனுல் பொறுப்போடும், பொறுமையோடும், பற்ருேடும், பாசத்தோடும், அன்போடும், சமாதானத்தோடும் செயல்பட வேண்டும்.

5) நாம்தான் சமய, சமுதாய, அரசியல் துறைகளில் புதிய தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் கூறுகிறேம். நமது இயக்கங்களுக்குத்தான் கொள்கை, குறிக்கோள், மிகத் தெளிவான செயல்திட்டம், படித்தவர்களின் தலைமை முதலியவை கிடைத்திருக்கின்றன! கிடைத்திருக்கின்றன!! கிடைத்திருக்கின்றன!!! மேலும், நமது இயக்கத்தவர்களால்தான் நோயாளிகளையும், பேயாளிகளையும் இதுவரை எந்த அருளாளர்களாலும், மருத்துவர்களாலும் நலப்படுத்த முடியாத அளவு நலப்படுத்தப்படுகின்றது. மேலும், <u>நாம் தொண்டு மனப்பான்மையில்தான் அனைத்தையும் செய்து வருகின்றேம். இதுவரை</u>

நம்மிடம் நன்மையடைந்தவர்கள் பல இலட்சம் மக்களாக இருக்கின்றார்கள். விரைவில் பல கோடி மக்கள் நம்மால் நலம் அடைவார்கள். இப்படி அநுபவப் பூர்வமாக நாம் தனிமனிதர்களுக்கும், குடும்பங்களுக்கும், சமுதாய அமைப்புக்களுக்கும் மிகச் சிறந்த பயனுள்ள, எவராலும் மாற்ற முடியாத அரிய தொண்டுகளை ஆற்றுகின்றோம். எனவே, நமது இயக்கங்கள் மக்களுக்கு மிகச் சிறந்த வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருந்திடும்! இருந்திடும்!! இருந்திடும்!!! நாம் எந்த அடிப்படையிலும் மக்களைச் சுரண்டவில்லை, ஏமாற்றவில்லை, வெறியுணர்வு தூண்டவில்லை. எனவே, நம்முடைய அரிய சேவைகள் இந்நாட்டிற்குத் தேவை என்பதை மிக விரைவில் அனைவரும் புரிந்து கொள்வார்கள். எனவே, நம்மவர்கள் அவசரமோ, ஆத்திரமோ, கோபதாபமோ, ஒருவருக்கொருவர் போட்டி பொறாமைகளோ, வம்போ, வீம்போ, அகம்பாவமோ, ஆணவமோ இல்லாமல் பொறுப்போடும், அன்போடும், கனிவோடும், அருளூற்றுக்களாக இன்று போல் என்றும் செயல்பட வேண்டும்! செயல்பட வேண்டும்!! செயல்பட வேண்டும்!!!

6) நமது இராசிபுரம் தேர்தல் அநுபவம் பொதுமக்கள் நம்மைப் போன்ற அருளாளர்களையும், ஞானிகளையும், தொண்டுள்ளம் கொண்ட மெய்யான மதவாதிகளையும், மிகத் தெளிவான கொள்கையையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் கூறக் கூடியவர்களைத்தான் சமய சமுதாய அரசியல்வாதிகளாக எதிர்பார்க்கின்றார்கள் என்ற பேருண்மை மிகத் தெளிவாகத் தெரிய வருகின்றது. எனவே, இந்த பேருண்மைகளை நினைவில் கொண்டு என்றென்றும் நிலையாக, தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கின்ற ஓர் இயக்கம் நமது இயக்கம். நமது தத்துவங்களும், சித்தாந்தங்களும்; சமுதாயவாதிகளாலும், அனைத்து வகையான சமயவாதிகளாலும், அரசியல்வாதிகளாலும் விரும்பி ஏற்கப்பட்டு உலக அருட்பேரரசை உருவாக்கக் கூடிய ஒன்று என்று நினைவில் கொண்டு செயல்படுங்கள். எனவே, நமது வளர்ச்சியில்

நிதானமாகவும், ஆழமாகவும், அகலமாகவும், வளமாகவும், வலிவாகவும், நல்ல கட்டுப்பாடு உடையதாகவும், ஒற்றுமை நிறைந்ததாகவும், ஒருமைப்பாடு உடையதாகவும், என்றைக்குமே எல்லோருமே தலைமைக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியதாகவும், ஒரே இயக்கமாகவும் அதாவது ஒரே கட்சியாக இருந்து செயல்படக் கூடியதாகவும் இருந்திடும்! இருந்திடும்!! இருந்திடும்!!! இதுபற்றிய எள்முனையளவு ஐயம் கூட எவருக்கும் வேண்டாம்.

**குறிப்பு**:- இப்பேருண்மைகளை அனைவரும் நினைவில் கொண்டிட்டால்; நம்மிடையிலே கூட ஒருசில தனிமனிதர்கள் தவறு செய்தார்கள், செய்கிறார்கள், செய்வார்கள் என்ற மானுட இயல் கருத்தை சாதாரணமாக புரிந்து கொள்ள முடியும். அதாவது, நம்மவர்களே தவறு செய்யலாமா? என்று யாரும் பதட்டப்படக் கூடாது!? கோபப்படக் கூடாது!? ஆத்திரப்படக் கூடாது!? அனாவசியமாக தேவையில்லாமல் ஒருவர் மீது ஒருவர் வெறுப்பையும், மறுப்பையும், எதிர்ப்பையும் வளர்த்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் தவறு செய்வது மனித இயற்கை. அப்படிப்பட்ட தவறான மனிதர்களைத் திருத்துவதற்காகத்தான் நாம் வந்திருக்கின்றோம். அந்த அரிய பணிகளை செய்யும் நம்மிடையே கூட ஒரு சில தனிமனிதர்கள் தவறு செய்யும் இயல்பினராக இருப்பது வியப்பல்ல?! வேதனையல்ல?! அதாவது, "**எந்த மனிதரின் தவறுகளுக்கும், குற்றம் குறைகளுக்கும், துரோக விரோத செயல்களுக்கும் நமது அருளுலகமோ, தத்துவமோ, சித்தாந்தமோ, கொள்கையோ, குறிக்கோளோ, செயல்திட்டமோ பொறுப்பல்ல! பொறுப்பல்ல!! பொறுப்பல்ல!!!**" என்ற மிகத் தெளிவான குருபாரம்பரியக் கருத்து நம்மிடையே ஏற்கனவே இருக்கின்றது. எனவே, தவறு செய்தவர்களை நல்ல பயிரினூடே முளைத்த களையாக எண்ணி அவ்வப்போது தவறு செய்பவர்களை நம்மிடையே இருந்து அகற்றிவிட வேண்டும். அவ்வளவுதான். அவர்கள் தங்களை நல்லவர்களாக ஆக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடும் வண்ணம்

அருளுரைகளையும், அறிவுரைகளையும் கூறி ஆங்காங்கே நிகழக் கூடிய பூசைகளில் கலந்து அருள்பெற்றுச் செல்லுமாறு செய்து அவர்களைப் புண்படுத்தாமல் வெளியே அனுப்பி விடுவதுதான் நல்லது. அதாவது, "**நாம் யாருக்கும் விரோதியில்லை, நமக்கு யாரும் விரோதியில்லை**" என்ற குருபாரம்பரிய வாசகப்படித்தான் செயல்பட வேண்டும்.

குறிப்பு:- பெரியவர் இராசு நயினு கொண்டு வந்த அறுபது போட்டோ கொண்ட கட்டு காணுமல் போய்விட்டது. ஒரு சமயம் அது நயினு பையிலேயே போய்விட்டதா எனக் கேட்டுத் தெரியப்படுத்தவும். இல்லையென்றுல், போட்டோவை குறைந்த விலையில் போட்டு உடனே தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வைக்கும்படி குறிப்பிடுக. **உடன் பதில் வரைக.**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**குருதேவர், தலைவர், ஞாஞச்சாரியார்,**
**பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி.**

***குருதேவர் கூற எழுதியது:***
தலைமைப்பீடத் திருவோலை நாயகம், கபாலீசுவரி சன்னிதானம்,
சீ. மணி, 24-1-89.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ. மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

அறிவிக்கை எண்: 428

**<u>பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்</u>**

(G.N.T.சாலை, காரனோடை, சென்னை-600067.)

**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், குருதேவர், பரபிறம்மம், தமிழர்களின் குருபீடம், ஞானாச்சாரியார், அருளாட்சி நாயகம், பதினெண்சித்தர் மடாதிபதியின்**

வாழ்த்துதல் பெற்ற, சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிடும்

**சித்தரடியான் இர. கங்காதரக் குமாரை 'படகு' சின்னத்தில் முத்திரையிட்டு ஆதரியுங்கள்.**

**இராசிபுரம் தொகுதி தேர்தல் நாள்: 21-1-89.**

**"சமய, சமுதாய, அரசியல் மறுமலர்ச்சிக்காகவும், தமிழின மொழி மத விடுதலைக்காகவும்; அருளாளர்கள்தான் நாடாள வேண்டும், சமுதாயத்திற்குத் தலைமை தாங்க வேண்டும்."** - என்ற குருபாரம்பரிய வாக்குப் படி; **தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தின்** ஆதரவு பெற்று, சித்தரடியான் **இர. கங்காதரக் குமார்** இத்தேர்தலில் போட்டியிடுகின்றார்.

# <u>அரசியல் வாதிகள் போட்டியிடுகின்ற தேர்தல் களத்தில் ஆன்மீக வாதிகள் ஏன் போட்டியிட வேண்டும்?</u>

கடந்த நாற்பது ஆண்டு காலமாக இந்தியா விடுதலை பெற்ற பின்னர் இந்தியாவில் எந்த ஒரு மொழியும், இனமும், மதமும் முழுமையான எழிச்சியையோ, விழிச்சியையோ, செழிச்சியையோ இதுவரை அடைய வில்லை. இதற்காக எந்த ஆட்சியும் அதற்கான

முயற்சியில் ஈடுபடவே இல்லை. இதுவரை ஆட்சியில் அமர்ந்தவர்கள் தன்னல வெறியோடு, மொழி இன மதங்களைத் தங்கள் விருப்பம் போல் சூறையாடித்தான் வாழ்ந்திருக்கிறார்கள். தேவைக்கேற்ப தங்கள் இனத்தையும், மொழியையும், மதத்தையும் மற்ற இனங்களுக்கும், மொழிகளுக்கும், மதங்களுக்கும் அடிமையாக்கி, பலியாக்கி ஆதாயம் தேடித்தான் வாழ்ந்திட்டார்கள்.

குறிப்பாக, பதினெண்சித்தர்கள் படைத்த சித்தர் நெறியான 'இந்து மதம்' இந்து மதத்தவர்களாலேயே ஏற்கப்படாமல் இகழப்பட்டு, நலிந்து மெலிந்து போயிற்று. ஆரவாரமான, போலியான, பொருளற்ற, பயனற்ற சடங்குகளாலும், சாத்திரச் சம்பிறதாயங்களாலும் இந்து மதத்தவர்களிடையே ஒற்றுமையின்மையும், சகோதரத் தன்மையின்மையும் பெருகி ஒளியிழந்து வாழ்ந்து வருகின்றனர். இதேபோல்தான் தமிழர்கள் மொழி வழியாகவும், இன வழியாகவும், ... மாற்றானுக்குக் கை கட்டி, சேவகம் புரியும் அடிமையாகவே இருந்து வர நேரிட்டுள்ளது.

இந்த இருள்களெல்லாம் நீங்கி **அருளாட்சி அமையும் போதுதான்** தமிழர்களின், இந்தியர்களின், உலக மானுடர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி தோன்றும். அதற்காக மொழிப்பற்றும், இனப்பற்றும், மதப்பற்றும் மிக்க அருளாளர்கள் நாடாண்டால்தான் முடியும். ஒவ்வொரு மொழியினரும், இனத்தவரும், மதத்தவரும் தன்மானத்தோடு, உரிமை பெருமைகளோடு, விடுதலை உணர்வுகளோடு, போராடி உரிமைமிகு பெருமை வாழ்வு பெற வேண்டும். சித்தர்களின் இந்துமதம்தான் **"அருளாளர்கள் அரசியலுக்கும், சமுதாயத்திற்கும் தலைமை தாங்கினால்தான் மொழி விடுதலை, இன விடுதலை, மத விடுதலைகளைக் காப்பாற்ற முடியும்!"** என்று கூறுகின்றது. எனவேதான், இத்தேர்தலில் அருளாளர்களாகிய நாங்கள் ஈடுபடுகின்றோம். இதேபோல் பிற மாநிலங்களிலுள்ள அருளாளர்களும் ஈடுபட வேண்டுகின்றோம்.

போலி உணர்வுகள் மிக்க அரசியல்வாதிகள் மறையவும், உண்மையான சமுதாய நலவாதிகள் தோன்றவும் செய்வதற்கான முயற்சியின் முன்னோடித் திட்டமாக

**தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவர் ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் வாழ்த்துதல் பெற்ற**
**இராசிபுரம் சித்தரடியான் இர. கங்காதரக் குமார்**

இத்தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடுகின்றார். இவர் மேற்கு மண்டலத்தின் பதினெண்சித்தர் மடத்தின் அருட்கோட்டப் பொறுப்பாளராக இராசிபுரத்தில் பல்லாண்டு காலம் செயல்பட்டு வருகின்றார். இவர் ஏழை, எளிய, பாமரர்களுக்கு நாள்தோறும் மந்திரித்து உடல் பிணியையும், உயிர்ப் பிணியையும் போக்கி நலப்படுத்தி வருகின்றார். இவர் தமிழ்மொழிப் பற்றோடும், தமிழினப் பற்றோடும் வாழ்ந்து வருகின்றவர். பதினெண் சித்தர் நெறியான இந்து மதத்தில் பயிற்சி பெற்ற சித்தரடியானாக வாழ்கின்றவர். இவரை இராசிபுரம் வாக்காளர்கள் ‘படகு’ சின்னத்தில் முத்திரையிட்டு ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம். அது தமிழகத்தில் **பொருளுலக இருளகன்று அருளாட்சி மலர வழி சமைக்கும்** என அறைகூவல் விடுக்கின்றோம்.

**<u>பதினெண்சித்தர் மடம், பீடம்,</u>**

**<u>தமிழின மொழி மத விடுதலை இயக்கம்.</u>**

**//உண்மை நகல்//**
**//மூலம்: அச்சிட்ட அறிவிக்கை.//**

# குருபாரம்பரிய வாசகங்கள்

“குருவாசகமும், திருவாசகமும் மனிதனின் கண்கள்.”

“மதமே மானுடப் பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் காப்பகம், கருவூலம்.”

“மதவழிப் பட்ட உணர்வும், செயலுமே உலகியலில் தெளிவும், தெம்பும், நிறைவும் உண்மையாகப் பெறச் செய்யும்.”

“ஆவி, ஆன்மா, உயிர் எனும் மூன்றின் முழுமையான செயல்விளக்கமே சித்தர் நெறி.”

“விழாக்களும், சடங்குகளும், சாத்திரச் சம்பிறதாயங்களுமே மானுட வாழ்வின் பொருள் விளக்கும் வழிகள்.”

“தெரியாதவை தெரியவும், புரியாதவை புரியவும் விழா வழி விளக்கத்தை உணருங்கள்.”

**- ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**<u>குறிப்பு</u>:** இந்து மறுமலர்ச்சி இயக்கம் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து அனைவரும் அருளாட்சி அமைப்புப் பணிக்கு ஒத்துழையுங்கள்.





மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

**"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**

**- குருபாரம்பரிய வாசகம்.**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org

https://gurudevar.in https://gurudevar.org

https://induism.org Email: indhuism@gmail.com

காணிக்கை: ரூ.10/-